# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 258/2024** |
| Deposition of Witness for | : | **P.W. 3** |
| Name | : | **குமார்** |
| Father's Name | : | **கோவிந்தன்** |
| Village | : | |
| Taluk | : | **திருப்புவனம்** |
| Calling | : | **டாஸ்மாக் விற்பனையாளர்** |
| Age | : | **49/2026** |

**(வழக்கின் 1வது எதிரி சிறையில் உள்ளார். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. 2-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 25.06.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது 7615 பூவந்தி டாஸ்மாக் கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 7674 என்ற கலியாந்துார் டாஸ்மாக் கடையில் விற்பனையாளராக பணிபுரிந்தேன். கடந்த 06.08.2018 ம் தேதி மாலை 4.15 மணியளவில் நானும், மலையரசன், முத்துக்குமார் ஆகியோர்கள் பணியில் இருக்கும்போது எங்களிடம் வந்து ஒரு நபர் மது வாங்கினார். பின்னர் பெயர் கேட்டு தெரிந்து கொண்டோம் அவர் பெயர் மணிகண்டன். மணிகண்டன் என்பவர் எங்களிடம் ரூ.150/- பணம் கொடுத்து ரோமன் காஸ்டில் என்ற மதுவை 110/- க்கு வாங்கினார். மீதி பணமான ரூ.40/- ஐ மலையரசன் கொடுத்து விட்டார். பின்னர் மணிகண்டன் எங்களிடம் மீதப்பணம் 20/- கொடுக்க வேண்டும் என்று பிரச்சினை செய்தார்.

WEB COPY

அவர் 200/- ரூபாய் கொடுத்தாகவும் நீங்கள் மீதி பணம் தரவேண்டும் எனவும் கேட்டார். அதற்கு மலையரசன் மணிகண்டனிடம் நீ 200/- ரூபாய் கொடுத்திருந்தால் மீதிப்பணம் 90/- கேட்கவேண்டும் எனவும் ஆனால் நீங்கள் கொடுத்தது ரூ.150/- என தெரிவித்தார். அதற்கு மணிகண்டன் இருடா உன்னை வைத்துக்கொல்கிறேன் என்று சொல்லிவிட்டு பின்பு 4.45 மணியளவில் திரும்ப வந்து பின்னால் மறைத்துவைத்திருந்த வீச்சருவாளை எடுத்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிக்கொண்டு மலையரசனை வெட்ட எத்தனித்தபோது மலையரசன் கைகளால் தடுத்தால் அவரது இடது கையில் அருவாள் வெட்டி சதை தொங்கிவிட்டது. நானும் சூப்பர்வைசர் முத்துக்குமாரும் சத்தம் போட்டவுடன் அவனை பிடிக்க முயற்சித்தபோது வீச்சருவாளை எங்கள் மீது வீசி, எங்களை மிரட்டிவிட்டு மது வாங்க வந்த மற்றொருவரின் இருசக்கரவாகனத்தை எடுத்துக்கொண்டு மணிகண்டன் என்பவர் சென்றுவிட்டார். அந்த வழியாக வந்த போக்கு ஆட்டோவில் ஏற்றி மலையரசனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். காவல்நிலையத்திற்கு போன் செய்து புகார் கொடுத்தோம். போலிசார் மருத்துவமனைக்கு வந்து சம்பவம் சம்மந்தமாக விசாரித்தார்கள். மலையரசனால் புகார் கொடுக்க இயலாத காரணத்தால் முத்துக்குமார் தான் புகாரை எழுதிக்கொடுத்தார். போலிசார் விசாரணையில் மணிகண்டனையும், அருணையும் அடையாளம் காட்டினோம். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தன்று கடையில் சூப்பர்வைசராக கிருஷ்ணமூர்த்தி என்பவர் பணியில் இல்லை என்றால் சரிதான். எதிரி மணிகண்டனின் பெயரை போலிசார் சொல்லித்தான் தெரியும். உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். வீச்சருவாளை என் மீது வீசி விட்டு சென்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

WEB COPY

எதிரி மணிகண்டனை சம்பத்தன்று இரவு போலிசார் என்னிடம் அடையாளம் காட்டினார்கள். நேரம் சரியாக ஞாபகமில்லை, சுமாரா இரவு 8.00 மணியிருக்குமா என்றால் இருக்கும். வீச்சருவாளை போலிசார் எடுத்துச் சென்றுவிட்டார்கள். காயம்பட்ட நபரை ஏற்றிச்சென்ற ஆட்டோவின் டிரைவரை எனக்கு ஞாபகமில்லை. வீச்சருவாளுக்கும் வெட்டருவாளுக்கும் வித்தியாசம் வேறு வேறானது என்றால் சரிதான். நான் சம்பவத்தன்று பணியில் இல்லை என்றும் நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சம்பவத்தன்று பணியில் இல்லை என்றும் நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரியின் பெயரை தற்போது போலிசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

/Sd./S.Mohana Ramya,
**உதவி அமர்வு நீதிபதி,**
**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**சிவகங்கை.**

WEB COPY